IN THE COURT OF IIIADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

C.C.No.52/18

PW1

Name : Thiru. N.Vijay Ananth

S/W Name :
Age :
Address :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 5th day of July 2023 .

---

5. 7. 2023

**கு.வி.மு.ச.பிரிவு 244 ன் கீழ் முதல் விசாரணை**

நான் தற்போது மருந்துகள் ஆய்வாளராக வில்லிவாக்கம் சரகம், மண்டலம்-2 தேனாம்பேட்டை, சென்னை -6 பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 1.10.2018 அன்று அரும்பாக்கம் சரக பொறுப்பு மருந்து ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 9.12.2016 அன்று திருமதி.கௌரி மருந்துகள் ஆய்வாளர் அரும்பாக்கம் சரகம் அவர்கள் Cutis care pharma கதவு எண் 10 பிளாக் எண்.23, 2ம் தளம், எம்.எம்.டி.எ. காலணி சென்னை 106 ல் அமைந்துள்ள மொத்த இருப்பு மருந்து கடையில் cusol Batch No.IRE-823 M/D 11/2016 Expiry Date 10/2018 Manufactured by Indu Remedies Private Limited, D-10 Mogapair Industrial Estate, Chennai என்ற மருந்தினை சோதனைக்காக எடுத்து அதை மருந்தாய்வு கூடத்திற்கு அனுப்பி வைத்தார். பிறகு அரசு பகுப்பாய்வாளர் சென்னை அவர்களிடமிருந்து படிவம் 13ன் கீழ் தேதி 2.7.2018 படி அந்த மருந்தானது தரமற்ற மருந்து அதாவது அதில் clobetasol propionate என்ற மருந்தானது இல்லை. ஆகையால் இது போலி மருந்தாகும். ஆகவே இது மருந்து மற்றும் அழகு சாதன சட்டம் 1940 ன் கீழ்

பிரிவு 18(a)(i) மேலும் பிரிவு 17 B(d) ன் படி தண்டனைகுறிய குற்றமாகும். ஆகையால் 4.7.2018 அன்று நான் மருந்து மாதிரி எடுத்த இடத்தை ஆய்வு செய்தபோது அந்த நிறுவனம் கடையைஇடமாற்றம் செய்தது தெரியவந்தது. ஆகையால் அவர்களது புதிய இடமான Cutis care pharma கதவு எண் 11 ஷ்மி அம்மாள் தெரு, 2ம் தளம் முன்பக்க பகுதி, அமிந்தகரை, சென்னை 29 ல் ஆய்வு மேற்கொண்டேன். அப்பொழுது அந்த Cusol என்ற போலி மருந்துகள் அவர்களிடம் இல்லை. ஆகையால் 5.7.2018 அன்று அவரிடம் அந்த மருந்துகளை யாரிடமிருந்து வாங்கினார் என்பதை கடிதம் மூலம் கேட்டேன். அதே நாளில் அவர் 954 x 30 m.l அளவு அந்த மருந்தினை அவர் Indu Remedies private Limited, மேற்சொன்ன விலாசத்தில் இருந்து 22.11.2016 அன்று பில் நம்பர் 290ன் கீழ் வாங்கியதாக தெரிவித்தார். ஆகையால் 6.7.2018 அன்று Indu Remedies Private Limited அவர்களுக்கு ஒரு கடிதமும் அத்துடன் படிவம் 13 அனுப்பி விதிமீறலுக்கு விளக்கம் கோரப்பட்டது. மேலும் அன்றைய தினமே திருமதி.கௌரி மருந்து ஆய்வாளர் ஏற்கனவே எடுத்த மாதிரிகளின் ஒரு பகுதியான மருந்து மாதிரியையும் அந்த நிறுவனத்திற்கு அனுப்பபட்டது. 25.7.2018 அன்று Indu Remedies Private Limited விளக்கம் பெறப்பட்டது. அதில் அவர்கள் இந்த மருந்து அரசு பகுப்பாய்வாளரின் அறிக்கையை ஒப்புக்கொள்ளவில்லை. அதன் பிறகு 17.9.2018 அன்று திரு.எம்.மதிவானன் இயக்குனர், Indu Remedies Private Limited அவர்களுக்கு விளக்கம் கேட்டு ஒரு கடிதம் அனுப்பினேன். பிறகு 24.9.2018 அன்று மதிவானன் அவர்களிடமிருந்து விளக்க கடிதம் பெறபட்டது. அதிலும் அவர்கள் அரசு பகுப்பாய்வாளரின் அறிக்கையை ஏற்கவில்லை. ஆகையால் 24.9.2018 அன்று மருந்து கட்டுப்பாட்டு துறை இயக்குனர், தமிழ்நாடு அவர்களுக்கு Indu Remedies Private Limited மற்றும் அதன் இயக்குனர் மீது வழக்கு தொடர அறிக்கை ஒன்று அளித்தேன். அதன்படி 27.9.2018 அன்று இயக்குனர் அவர்களிடமிருந்து இசைவு ஆணை பெறப்பட்டது. பிறகு 1.10.2018 அன்று

இந்நீதிமன்றத்தில் தனி புகாரினை சமர்பித்தேன். பிறகு 1.10.2018 அன்று திருமதி.கௌரி மருந்து ஆய்வாளர் அவர்கள் எடுத்த 3வது பகுதி மாதிரிகளை மாண்புமிகு நீதிமன்றத்தில் சமர்பித்து C.P.No.241/2018 B.No.1/18 பெறப்பட்டது. அதன் பிறகு 3.10.2018 அன்று படிவம் 1ன் கீழ் Central Drugs Laboratory, KolKotta விற்கு மாண்புமிகு நீதிமன்றம் மூலமாக 3வது மாதிரி அனுப்பபட்டது. பிறகு 3.12.2018 அன்று படிவம் 2ன் கீழ் Central Drugs Laboratory, KolKotta லிருந்து படிவம் 2ன் கீழ் பகுப்பாய்வு அறிக்கை மாண்புமிகு நீதிமன்றத்திற்கு அனுப்பபட்டது. மேற்படி அறிக்கையிலும் மேற்படி மருந்து உட்பொருள் இல்லை என்று அறிக்கை பெறப்பட்டது. ஆகையால் இது போலி மருந்தாகும். மருந்து மற்றும் அழகு சாதன சட்டம் 1940 ன் கீழ் பிரிவு 18(a)(i) மேலும் பிரிவு 17 B(d) ன் படி தண்டனைகுறிய குற்றமாகும். மேலும் தண்டனை சட்டம் பிரிவு 27 (c) மருந்து மற்றும் அழகு சாதன சட்டம் 1940 கீழ் தண்டனைகுறிய குற்றமாகும்.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

5.7.2023

III Addl. Sessions Judge.
III Addl. Court.